جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخـبـر

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

1-A

جَنّٰتُ عَدْنٍ يَّدْخُلُوْنَهَا يُحَلَّوْنَ فِيْهَا مِنْ اَسَاوِرَ
مِنْ ذَهَبٍ وَّلُـؤْلُؤًا ۚ وَلِبَاسُهُمْ فِيْهَا حَرِيْرٌ

وَقَالُوا الْحَمْدُ لِلّٰهِ الَّذِىْٓ اَذْهَبَ عَـنَّا الْحَزَنَ ؕ
اِنَّ رَبَّنَا لَـغَفُوْرٌ شَكُوْرُ ۙ

وَقَالُوا الْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ هَدٰىنَا لِهٰذَا وَمَا كُنَّا
لِنَهْتَدِىَ لَوْلَاۤ اَنْ هَدٰىنَا اللّٰهُ ۚ

அல்குர்ஆன் 35 : 33-35

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

1-B

ஜன்னா(த்)து அத்னிய்யத்ஹு(ख़)லூனஹா யுஹல்லவ்ன பீ(ஃ)ஹா மின் அஸாவிர மின் தஹபிவ் வலுஃலுஅன் வலிபாஸுஹும் பீ(ஃ)ஹா ஹரீர்.

வகாலுல் ஹம்து லில்லாஹில்லதீ அத்ஹப அன்னல் ஹஸ(ஜ)ன் இன்ன ரப்பனா லக(ஃ)பூ(ஃ)ருன் ஷகூர்.

வகாலுல் ஹம்து லில்லாஹில்லதீ ஹதானா லிஹாதா வமா குன்னா லிநஹ்ததிய லவ்லா அன் ஹதானல்லாஹ்.

அல்குர்ஆன் 35 : 33-35

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

1-C

அவர்கள் நிலையான சுவனபதிகளில் புகுவார்கள், அங்கே அவர்கள் பொன்னாலும், முத்தாலுமான கடகங்கள் அணிவிக்கப்படுவார்கள். இன்னும் அங்கு அவர்களுடைய ஆடைகள் பட்டா(லானவையா)க இருக்கும்.

“எங்களை விட்டு (எல்லாக்)கவலைகளையும் போக்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரியதாகும், நிச்சயமாக எங்கள் இறைவன் மிக மன்னிப்பவன், நன்றியை ஏற்றுக் கொள்பவன்” என்றும் அவர்கள் கூறுவார்கள்.

அவன் தன் அருளிலிருந்து என்றென்றும் நிலையான வீட்டில் எங்களை இருக்கச் செய்தான், அதில் எந்த விதமான சங்கடமும் எங்களைத் தீண்டுவதில்லை. அதில் எங்களை எந்தச் சோர்வுகளும் தீண்டுவதில்லை” (என்றும் கூறுவார்கள்).

அல்குர்ஆன் 35 : 33-35

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

2-A

وَقَالُوا الْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ هَدٰٮنَا لِهٰذَا وَمَا كُنَّا
لِنَهْتَدِىَ لَوْلَاۤ اَنْ هَدٰٮنَا اللّٰهُ ۚ

وَنَزَعْنَا مَا فِىْ صُدُوْرِهِمْ
مِّنْ غِلٍّ تَجْرِىْ مِنْ تَحْتِهِمُ الْاَنْهٰرُ ۚ
وَقَالُوا الْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ هَدٰٮنَا لِهٰذَا وَمَا كُنَّا
لِنَهْتَدِىَ لَوْلَاۤ اَنْ هَدٰٮنَا اللّٰهُ ۚ لَقَدْ جَآءَتْ
رُسُلُ رَبِّنَا بِالْحَـقِّ ؕ وَنُوْدُوْۤا اَنْ تِلْكُمُ الْجَـنَّةُ
اُوْرِثْتُمُوْهَا بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ

அல்குர்ஆன் 7 : 43

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

2-B

வகாலுல் ஹம்து லில்லாஹில்லதீ ஹதானா லிஹாதா வமா குன்னா லிநஹ்ததிய லவ்லா அன் ஹதானல்லாஹ்.

வநஸ(ز)ஃனா மாபீ(ف)ஸு(ص)தூரிஹிம் மின் கி(غ)ல்லின் தஜ்ரீ மின் தஹ்திஹிமுல் அன்ஹார். வகாலுல் ஹம்து லில்லாஹில்லதீ ஹதானா லிஹாதா வமா குன்னா லிநஹ்ததிய லவ்லா அன் ஹதானல்லாஹ் லகத் ஜாஅத் ருசுலு ரப்பினா பில்ஹக். வநூதூ அன் தில்குமுல் ஜன்ன(த்)து ஊரிஸ்(ث)துமூஹா பிமா குன்தும் தஃமலூன்.

அல்குர்ஆன் 7 : 43

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

2-C

அவர்கள் கூறுவார்கள்: “இ(ந்த பாக்கியத்தைப் பெறுவ)தற்குரிய நேர்வழியை எங்களுக்குக் காட்டிய அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும் உரியதாகும், அல்லாஹ் எங்களுக்கு நேர் வழி காட்டியிராவிட்டால், ஒருக்காலும் நாங்கள் நேர்வழி அடைந்திருக்கமாட்டோம்.

தவிர (இவ்வுலகில் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த) குரோதத்தையும் அவர்களுடைய இதயங்களிலிருந்து நீக்கி விடுவோம், அவர்களுக்கு அருகில் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும், இன்னும் அவர்கள் கூறுவார்கள்: “இ(ந்த பாக்கியத்தைப் பெறுவ)தற்குரிய நேர்வழியை எங்களுக்குக் காட்டிய அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும் உரியதாகும், அல்லாஹ் எங்களுக்கு நேர் வழி காட்டியிராவிட்டால், ஒருக்காலும் நாங்கள் நேர்வழி அடைந்திருக்கமாட்டோம் - நிச்சயமாக எங்கள் இறைவனுடைய தூதர்கள் உண்மை (மார்க்கத்தை)யே (நம்மிடம்) கொண்டு வந்தார்கள்” (இதற்கு பதிலாக, “பூமியில்) நீங்கள் செய்து கொண்டிருந்த (நன்மையான) காரியங்களின் காரணமாகவே நீங்கள் இந்த சுவனபதியின் வாரிசுகளாக்கப்பட்டு இருக்கிறீர்கள்” என்று அழைக்கப்படுவார்கள்.

அல்குர்ஆன் 7 : 43

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

3-A

وَسِيۡقَ الَّذِيۡنَ اتَّقَوۡا رَبَّهُمۡ اِلَى الۡجَـنَّةِ
زُمَرًا ؕ حَتّٰٓى اِذَا جَآءُوۡهَا وَفُتِحَتۡ
اَبۡوَابُهَا وَقَالَ لَهُمۡ خَزَنَتُهَا سَلٰمٌ
عَلَيۡكُمۡ طِبۡتُمۡ فَادۡخُلُوۡهَا خٰلِدِيۡنَ

وَقَالُوا الۡحَمۡدُ لِلّٰهِ الَّذِىۡ صَدَقَنَا وَعۡدَهٗ
وَاَوۡرَثَنَا الۡاَرۡضَ نَتَبَوَّاُ مِنَ الۡجَـنَّةِ
حَيۡثُ نَشَآءُ ۚ فَنِعۡمَ اَجۡرُ الۡعٰمِلِيۡنَ

அல்குர்ஆன் 39 : 73,74

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

3-B

வஸீகல்லதீனத்தகவ் ரப்பஹும் இலல்
ஜன்ன(த்)தி ஸு(ز)மரா ஹத்தா இதா
ஜாஊஹா வபு(ف)திஹத் அப்வாபுஹா
வகால லஹும் ஹ(خ)ஸ(ز)னதுஹா
ஸலாமுன் அலைக்கும் தி(ط)ப்தும்
ப(ف)த்குலூஹா கா(خ)லிதீன்.

வகாலுல் ஹம்து லில்லாஹில்லதீ
ஸ(ص)தகனா வஃதஹு,
வஅவ்ரஸ(ث)னல் அர்ழ(ض) நதபவ்வஉ
மினல் ஜன்ன(த்)தி ஹைஸு(ث) நஷாஉ
ப(ف)நிஃம அஜ்ருல் ஆமிலீன்.

அல்குர்ஆன் 39 : 73,74

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

3-C

“எவர் தம் இறைவனுக்கு பயபக்தியுடன் நடந்து கொண்டார்களோ அவர்கள் கூட்டங் கூட்டமாக சுவர்க்கத்தின்பால் கொண்டு வரப்படுவார்கள், அங்கு அவர்கள் வந்ததும், அதன் வாசல்கள் திறக்கப்படும், அதன் காவலர்கள் அவர்களை நோக்கி: “உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும், நீங்கள் மணம் பெற்றவர்கள், எனவே அதில் பிரவேசியுங்கள், என்றென்றும் அதில் தங்கிவிடுங்கள்” (என்று அவர்களிடம் கூறப்படும்).”

”அதற்கு (சுவர்க்கவாசிகள்): “அல்ஹம்து லில்லாஹ்! அவன் தன் வாக்குறுதியை எங்களுக்கு உண்மையாக்கி வைத்து, சுவர்க்கத்தில் நாம் விரும்பும் இடமெல்லாம் சென்றிருக்க (அப்) பூமியை எங்களுக்கு உரிமையாக்கி வைத்தான்” என்று கூறுவார்கள். எனவே நன்மை செய்தோரின் கூலி (இவ்வாறு) நன்மையாகவே இருக்கிறது.

அல்குர்ஆன் 39 : 73,74

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

4-A

إِنَّ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ يَهْدِيهِمْ رَبُّهُمْ
بِإِيمَانِهِمْ ۖ تَجْرِي مِنْ تَحْتِهِمُ الْأَنْهَارُ فِي جَنَّاتِ النَّعِيمِ
دَعْوَاهُمْ فِيهَا سُبْحَانَكَ اللَّهُمَّ وَتَحِيَّتُهُمْ فِيهَا سَلَامٌ ۚ
وَآخِرُ دَعْوَاهُمْ أَنِ الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

இன்னல்லதீன ஆமனூ வஅமிலுஸ்
ஸா(ص)லிஹா(த்)தி யஹ்தீஹிம் ரப்புஹும்
பிஈமானிஹிம் தஜ்ரீ மின் தஹ்திஹிமுல்
அன்ஹாரு பீ(ف)ஜன்னா(த்)தின்னயீம்.

தஃவாஹும் பீ(ف)ஹா ஸுப்ஹானகல்லாஹும்ம,
வதஹிய்யதுஹும் பீ(ف)ஹா ஸலாம்.
வஆஹி(خ)ரு தஃவாஹும் அனில்ஹம்து
லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

அல்குர்ஆன் 10 : 9,10

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

4-B

"நிச்சயமாக எவர்கள் ஈமான் கொண்டு நற்கருமங்கள் செய்கிறார்களோ அவர்களுக்கு அவர்களுடைய இறைவன் அவர்கள் ஈமான் கொண்ட காரணத்தினால் நேர் வழிகாட்டுவான், இன்பமயமான சுவனபதிகளில் அவர்களுக்குக் கீழ் நதிகள் ஓடிக் கொண்டிருக்கும்."

அதில் அவர்கள்: "(எங்கள்) அல்லாஹ்வே! நீ மகா பரிசுத்தமானவன்" என்று கூறுவார்கள், அதில் (தம் தோழர்களைச் சந்திக்கும் போது) அவர்களின் முகமன் ஸலாமுன் என்பதாகும். "எல்லாப் புகழும் அகிலங்கள் அனைத்துக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே" என்பது அவர்களது பிரார்த்தனையின் முடிவாகவும் இருக்கும்.

அல்குர்ஆன் 10 : 9,10

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

5-A

## சொர்க்கவாசிகள் உலகில் இவ்வாறு பிரார்த்திப்பவர்களாக இருந்தார்கள்

قُلْ أَؤُنَبِّئُكُمْ بِخَيْرٍ مِّنْ ذٰلِكُمْ ۗ
لِلَّذِينَ اتَّقَوْا عِنْدَ رَبِّهِمْ جَنّٰتٌ تَجْرِي مِنْ
تَحْتِهَا الْأَنْهٰرُ خٰلِدِينَ فِيهَا وَأَزْوَاجٌ مُّطَهَّرَةٌ
وَّرِضْوَانٌ مِّنَ اللّٰهِ ۗ وَاللّٰهُ بَصِيرٌۢ بِالْعِبَادِ ۚ

الَّذِينَ يَقُولُونَ رَبَّنَا إِنَّنَا آمَنَّا فَاغْفِرْ لَنَا
ذُنُوبَنَا وَقِنَا عَذَابَ النَّارِ ۚ

அல்குர்ஆன் 3 : 15,16

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

5-B

## சொர்க்கவாசிகள் உலகில் இவ்வாறு பிரார்த்திப்பவர்களாக இருந்தார்கள்

குல் அஉநப்பிஉகும் பிகை(خ)ரிம் மின் தாலிகும்
லில்லதீனத்தகவ் இன்த ரப்பிஹிம்
ஜன்னா(த்)துன் தஜ்ரீ மின் தஹ்திஹல்
அன்ஹாரு ஹா(خ)லிதீன பீ(ف)ஹா
வஅஸ்(ز)வாஜும் முத(ط)ஹ்ஹர(த்)துவ்
வரிழ்(ض)வானும் மினல்லாஹ் வல்லாஹு
பஸீ(ص)ரும் பில்இபாத்.

அல்லதீன யகூலூன ரப்பனா இன்னனா
ஆமன்னா ப(ف)க்(غ)பி(ف)ர்லனா துனூபனா
வகினா அதாபன்னார்.

அல்குர்ஆன் 3 : 15,16

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

5-C

## சொர்க்கவாசிகள் உலகில் இவ்வாறு பிரார்த்திப்பவர்களாக இருந்தார்கள்

(நபியே!) நீர் கூறும்: "அவற்றை விட மேலானவை பற்றிய செய்தியை நான் உங்களுக்குச் சொல்லட்டுமா? தக்வா (பயபக்தி) உடையவர்களுக்கு, அவர்களுடைய இறைவனிடத்தில் சுவனபதிகள் உண்டு, அவற்றின் கீழ் நீரோடைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன, அவர்கள் அங்கு என்றென்றும் தங்குவார்கள், (அங்கு அவர்களுக்குத்) தூய துணைகள் உண்டு, இன்னும் அல்லாஹ்வின் திருப் பொருத்தமும் உண்டு. அல்லாஹ் தன் அடியார்களை உற்று நோக்குகிறவனாக இருக்கின்றான்.

இத்தகையோர் (தம் இறைவனிடம்): "எங்கள் இறைவனே! நிச்சயமாக நாங்கள் (உன் மீது) நம்பிக்கை கொண்டோம், எங்களுக்காக எங்கள் பாவங்களை மன்னித்தருள் செய்வாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக!" என்று கூறுவார்கள்.

அல்குர்ஆன் 3 : 15,16

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

6-A

**சொர்க்கவாசிகள் வேதனை பற்றி அஞ்சியவர்களாக உலகில் தங்கள் இறைவனிடம் பிரார்த்திப்பவர்களாக இருந்தார்கள்**

وَاَقْبَلَ بَعْضُهُمْ عَلٰى بَعْضٍ يَّتَسَآءَلُوْنَ

قَالُـوْۤا اِنَّا كُـنَّا قَبْلُ فِىْۤ اَهْلِنَا مُشْفِقِيْنَ

فَمَنَّ اللّٰهُ عَلَيْنَا وَوَقٰنَا عَذَابَ السَّمُوْمِ

اِنَّا كُـنَّا مِنْ قَبْلُ نَدْعُوْهُ ‌ؕ اِنَّهٗ هُوَ الْبَـرُّ الرَّحِيْمُ

அல்குர்ஆன் 52 : 25,28

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

6-B

**சொர்க்கவாசிகள் வேதனை பற்றி அஞ்சியவர்களாக உலகில் தங்கள் இறைவனிடம் பிரார்த்திப்பவர்களாக இருந்தார்கள்**

வஅக்பல பஃது(ض)ஹும் அலா
பஃதி(ض)ய் யதஸாஅலூன்.

காலூ இன்னா குன்னா கப்லு
பீ(ف)அஹ்லினா முஷ்பி(ف)கீன்.
ப(ف)மன்னல்லாஹு அலைனா
வ வகானா அதாபஸ்ஸமூம்.

இன்னா குன்னா மின் கப்லு நத்ஊஹு
இன்னஹு ஹுவல் பர்ருர் ரஹீம்.

**அல்குர்ஆன் 52 : 25,28**

# சொர்க்கவாசிகளின் பிரார்த்தனைகள்

6-C

## சொர்க்கவாசிகள் வேதனை பற்றி அஞ்சியவர்களாக உலகில் தங்கள் இறைவனிடம் பிரார்த்திப்பவர்களாக இருந்தார்கள்

அவர்களில் (சொர்க்க வாசிகளில்) சிலர் சிலரை முன்னோக்கி விசாரித்துக் கொள்வார்கள்.

"இதற்கு முன் (உலகில்) நாம் நம் குடும்பத்தாரிடையே இருந்த போது (வேதனை பற்றி) நிச்சயமாக அஞ்சியவர்களாகவே இருந்தோம்.

"ஆனால் அல்லாஹ் நம்மீது உபகாரம் செய்து கொடிய வேதனையிலிருந்து நம்மை காப்பாற்றினான்.

"நிச்சயமாக நாம் முன்னே (உலகில்) அவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தோம், நிச்சயமாக அவனே மிக்க நன்மை செய்பவன், பெரும் கிருபையுடையவன்."

அல்குர்ஆன் 52 : 25,28